## 51

# சீஷர்கள் ஆகின்றவர்கள்

## லூக். 9:57–62; மேலும் மத். 8:19–22, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

பணம் திரும்பத்தரப்படும் என்று எழுதப்பட்ட உத்தரவாதத்துடன் வந்த, பெரிய அளவில் வாங்கிய பொருள் ஒன்றினிமித்தம் நீங்கள் எப்போதாவது மோசமான அனுபவத்தைப் பெற்று இருக்கின்றீர்களா? பிற்பாடு அந்தப் பொருள், வாக்குறுதி அளிக்கப்பட்டபடி செயல்படாத போது, நீங்கள் பணத்தைத் திருப்பித் தரும்படி கேட்டிருக்கலாம். அப்பொழுது உங்களுக்கு, "ஓ, இல்லை, நீங்கள் கொண்டுள்ள பிரச்சனை யானது உத்தரவாதத்தில் அடங்கியிருப்பதில்லை. *சிற்றெழுத்துக் குறிப்புக் களை வாசித்துப் பாருங்கள்*" என்று கூறப்பட்டு இருக்கலாம்.[1] மனிதர்கள் சிற்றெழுத்துக் குறிப்புக்களைப் பயன்படுத்தலாம், ஆனால் கிறிஸ்து அவ்வாறு பயன்படுத்துவதில்லை. அவர் சீஷத்துவத்திற்கென்று மனிதர்களை அழைத்தபோது, கேட்டுக் கொள்ளப்படுவது என்ன என்பதை மிகச் சரியாகவும் எதிர்பார்க்கப்படுவது என்ன என்பதை மிகச் சரியாகவும் அவர்களுக்குக் கூறினார்.

இது நமது தற்போதைய வேத பாடப் பகுதியை விட வேறு எவ்விடத் திலும் அதிகம் உறுதியானதாக இருப்பதில்லை. இயேசு எருசலேமுக்குச் செல்லும் தமது வழியில் இருந்தார் (லூக். 9:51). உபத்திரவங்களும் விசாரணைகளும் - கடைசியாக அவரது மரணமும் (லூக். 9:44) அங்கே அவருக்குக் காத்திருந்தன. அவர், "வழியிலே போகையில்" (லூக். 9:57), சீஷர்கள் ஆகவிருந்த மூன்று பேரைச் சந்தித்தார். அவர்களிடத்தில் அவரது அறைகூவலானது அவர் எதிர்பார்த்திருந்த உறுதிப்பாட்டின் வகையைப் பற்றி எவ்வித சந்தேகத்தையும் விட்டு வைக்காதிருந்தது.

இந்த மூன்று மனிதர்களிடத்திலும் கிறிஸ்து கூறியவற்றை நீங்கள் வாசிக்கும்போது, அவரது வார்த்தைகள் கடுமையானவைகளாக ஒலிக்கலாம். பல உண்மைகள் சிந்தையில் காத்துக் கொள்ளப்பட வேண்டும். (1) நம்மில் பெரும்பான்மையானவர்கள் அந்த நாளின் பழக்கங்களை நன்கு அறியாதவர்களாயிருக்கின்றோம். அந்தப் பழக்கங்களைப் பற்றிய அறிவானது, கேட்டுக் கொள்ளப்பட்ட வேண்டுகோள்கள் மற்றும் இயேசு வின் பதில்[கள்] ஆகியவற்றிற்குப் புதியதொரு சாய்மானத்தை இடக்கூடும்.

*(2) கர்த்தரால் சிந்தைகளையும் இருதயங்களையும் வாசிக்க முடிந்தது (மத். 9:4; 12:25; லூக். 5:20, 22; 6:8; யோவா. 1:47; 2:25; 21:17இ). ஒரு நபரின் வேண்டுகோள் நியாயமானதாகக் காணப்பட்டாலும் கூட, அந்தத் தனிநபர் தனது இருதயத்தில் உண்மையிலேயே கொண்டிருந்தது என்ன என்பதை இயேசு அறிந்திருந்தார். (3) கிறிஸ்து யுத்தத்திற்குச் சென்று கொண்டிருந்தார். திடமற்ற இருதயங்கொண்ட புதுப்பணியாளர்களுக்காக அவர் நேரம் கொண்டிருந்தது இல்லை. (4) இயேசு முதலில் தம்மிடம் கேட்டுக் கொண்டிராத எதையும் இந்த மனிதர்களிடத்தில் கேட்டுக் கொண்டதில்லை. நமது படிப்பில், அவரது வற்புறுத்துதல்களை மென்மைப் படுத்தாமல் கடுமைத்தன்மையைக் குறைத்தல் என்பதே எனது கடினப் பணியாக இருக்கும். அந்த நாளில் மற்றும் இந்த நாளில், கிறிஸ்து முழுமையான ஒப்புவித்தலுக்கு அழைக்கின்றார்.*

*லூக்கா 9:57-62 நமது அடிப்படை வசனப்பகுதியாக இருக்கும். மத்தேயு 8:19-22 வசனப்பகுதியானது இதே போன்றதொரு நிகழ்ச்சியின் பதிவைக் கொண்டுள்ளது. இவைகள் ஒரே நிகழ்ச்சியா அல்லவா என்பதை நாம் அறிவதில்லை,[2] ஆனால் இரு வரலாறுகளும் பயன்மிக்க வகையில் ஒன்றாய்க் கூட்டிப் படிக்கப்படுவதற்குப் போதுமான அளவில் இவ்வசனப்பகுதிகள் ஒன்றுபோல் உள்ளன.*

## அந்நாட்களில் சீஷர்கள் ஆகின்றவர்களாய் இருந்தவர்கள்

### *மனத்தூண்டுதல் கொண்டிருந்த நபர் (லூக். 9:57, 58; மத். 8:19, 20ஐயும் காணவும்)*

*சீஷர்கள் ஆகின்றவர்களாய் இருந்தவர்களில் முதல் நபர், "நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன்" என்று இயேசுவிடம் கூறினார் (லூக். 9:57ஆ). "என்னைப் பின்பற்றி வா" என்பது சீஷத்துவத்திற்கான இயேசுவின் அழைப்பாக எவ்வித மாறுதலுமின்றியிருந்தது (லூக். 9:59; மத். 4:19; 9:9; 10:38; 16:24; 19:21 ஆகியவற்றைக் காணவும்). இந்த மனிதர் அந்த அறைகூவலுக்குப் பின்வருமாறு பதில் அளித்தார்: "நான் உம்மைப் பின்பற்றி வருவேன்." மற்றும் அவர் தாம் எவ்வளவு தூரம் செல்லுவார் என்பதற்குக் கட்டுப்பாடுகளை இடவில்லை: "நீர் எங்கே போனாலும் உம்மைப் பின் பற்றி வருவேன்."[3] அந்த வகையான ஒப்புவித்தலைக் குற்றம்பிடிப்பது கடினமாயிருக்கும். மத்தேயு 8ம் இதே நிகழ்ச்சியைக் கூறும் என்றால், இம்மனிதர் ஒரு வேதபாரகராக இருந்தார் (வ. 19). வேதபாரகர்களில் பலர் கிறிஸ்துவின் எதிராளிகளாய் இருந்தனர் (மத். 9:3; 12:38; 15:1, 2; 16:21). விரோதிகளின் முகாமிலிருந்து வந்த ஒருவர் சீஷர்களுடன் தன்னை முழுவதுமாக சேர்த்துக் கொள்ளுதல் என்பது உணர்வெழுச்சிமிக்கதாக இருந்திருக்க வேண்டும்.*

*இருப்பினும் இயேசு, இந்த மனிதரின் இருதயத்திற்குள் கண்ணோக்கிய போது, இம்மனிதர் தாம் பேசிய வார்த்தைகளின் முழுத் தனிச்சிறப்பையும்*

புரிந்துகொண்டிருக்கவில்லை என்பதைக் கண்டார். சுயமறுப்பு, தியாகங்கள் மற்றும் உபத்திரவம் ஆகியவற்றைக் காண வேண்டும் என்று கிறிஸ்து விரும்பிய இடத்தில், இவர் [சீஷர்] கூட்டங்களையும், அற்புதங்களையும் மற்றும் மனக்கிளர்ச்சியையும் பார்த்துக் கொண்டிருந்தார். இவர், சீருடைகள், அணிவகுப்புகள், மற்றும் மெடல்கள் ஆகியவற்றிற்காக இராணுவத்தில் சேர்ந்து, ஒழுங்குமுறை, அபாயம் அல்லது மரணம் ஆகியவற்றிற்குச் சிறிதளவே சிந்தனையைத் தந்த மனிதனைபோல் இருந்தார்.

இம்மனிதரின் அளிப்பைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளவுமில்லை புறக் கணிக்கவுமில்லை. மாறாக, அவர் தம்மைப் பின்பற்றினால் இவர் எதிர் பார்க்கக் கூடுவது என்ன என்பதைச் சுட்டிக்காண்பித்தார்: "நரிகளுக்குக்[4] குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும்[5] உண்டு, மனுஷ குமாரனுக்கோ[6] தலை சாய்க்க இடமில்லை"[7] (லூக். 9:58; மத். 8:20ஐக் காணவும்). நாளின் முடிவில் திரும்பி வரக்கூடும்படி வனவிலங்குகளும் பறவைகளும் கூட இல்லிடங்களைக் கொண்டிருந்தன, ஆனால் கிறிஸ்து நிலையான தங்கும் இடத்தைக் கொண்டிருந்ததில்லை.[8] அவருக்குச் சத்திரத்தில் இடமில்லாதிருந்தது (லூக். 2:7), கதரேனருடைய நாட்டில் அவருக்கு இடமில்லாதிருந்தது (மாற். 5:1-17), மற்றும் அவருக்கு நாசரேத்தூரில் இடமில்லாதிருந்தது (லூக். 4:16-31). ஆல்ஃப்ரெட் பிளம்மர் அவர்கள், "இயேசுவின் வாழ்வானது கடனாகப் பெறப்பட்ட ஒரு முன்னணையில் தொடங்கி, கடனாகப் பெறப்பட்ட ஒரு கல்லறையில் முடிந்தது" என்று கூறினார்.[9] பவுல், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ள வராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான் களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரி. 8:9).[10]

இயேசு பரிவிரக்கத்திற்காக முறையிடவோ அல்லது வேண்டுகோள் விடுக்கவோ இல்லை; அவர் தமது வாழ்வுப் பாணியை மனவிருப்பத்துட னேயே தேர்ந்துகொண்டார்.[11] அவர் தமது சீஷராகவிருந்தவரை உற்சாகம் குறையச் செய்யவுமில்லை, ஆனால் ஒரு சீஷராயிருத்தல் என்பது எதனை மேற்சுமந்துள்ளது என்று இந்த மனிதர் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். "செலுத்த வேண்டிய விலையை எண்ணிப்பாருங்கள்" என்பதே மனத்தூண்டுதல் உள்ள இந்த சீஷருக்குக் கர்த்தரின் செய்தியாக இருந்தது.[12]

ஒரு இளைஞன் மருத்துவராக விரும்பினால், நாம் அவனுக்கு, "அது ஒரு தகுதியான பேரார்வமாக உள்ளது, ஆனால் முதலில் நீ அதற்கான விலையை எண்ணிப் பார்த்தலை நிச்சயப்படுத்திக் கொள். படிப்பு மற்றும் பணிப் பயிற்சி ஆகியவற்றில் பல ஆண்டுகள் செலவிடுகையில் பிழைத்தி ருக்க வேண்டும் என்பது உன்னிடம் கேட்டுக் கொள்ளப்படும் அர்ப்பணிப் பாக உள்ளது என்பதை நீ புரிந்துகொண்டவுடன், அவ்வகையான அர்ப்பணிப்பை மேற்கொள்வதற்கு நீ இன்னமும் தயாராக இருந்தால், முன்னேறிச் செல்." "விலையை எண்ணிப் பாருங்கள்!" நீங்கள் ஒரு பட்டம் பெற விரும்பினால், உலகப் புகழ்பெறும் பந்தயக்காரராக விரும்பினால்,

*நீங்கள் திருமணம் செய்துகொள்ள விரும்பினால், அல்லது நீங்களும் உங்கள் துணையும் ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ள விரும்பினால், அது ஒரு நல்ல அறிவுரையாக உள்ளது. பெரும்பாலான வேளைகளில், நாம் மக்களுக்கு எதிராக அறிவுரை கூறுவதற்கு அவர்களை விலையை எண்ணிப் பார்க்கச் சொல்லுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக, எழக்கூடிய சிரமங்களின் மத்தியிலும் அவர்கள் தங்களின் தீர்மானத்தைச் செயல் படுத்தும்படி உறுதியான முடிவை அவர்களுக்குள் நிலை நாட்டுவதற்கே அறிவுரை கூறுகின்றோம்.*

*''விதைப்பவன் உவமையில்'' (மத். 13:18), கற்பாறையான இடம் என்பது ஒரு வகையான மண்ணாக இருந்தது. இந்த மண்ணில் செடியானது பூமியிலிருந்து விரைவில் முளைத்தெழும்பிற்று; ஆனால் மேகத்தில் சூரியன் ஒளிவிட்டபோது, அது மிக விரைவாக வாடிப்போயிற்று (மத். 13:5, 6). இது, ''வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்ளுகிறவன்; ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்'' என்ற வகையான மனிதனைக் குறித்தது என்று கிறிஸ்து கூறினார் (மத். 13:20, 21). இந்த சீஷர் ஆகின்றவர் இப்படிப்பட்டதொரு முடிவை அடைவதைக் கர்த்தர் விரும்பவில்லை.*

***தீர்மானமற்ற நபர் (லூக். 9:59, 60; மத். 8:21, 22)***

*சீஷராகவிருந்த முதல் நபர் தாமாகவே மனவிருப்பம் உடையவராய் உடனேயே முன்வந்தார், ஆனால் இரண்டாவது நபருக்கு ஊக்கமூட்டப் படுதல் தேவைப்பட்டது.[13] இவரிடத்தில் கிறிஸ்து, மற்ற பலரிடத்தில் கூறியது போலவே "என்னைப் பின்பற்றி வா" என்றார் (லூக். 9:59அ; மத். 8:22ஆ - வைக் காணவும்).[14]*

*இந்த மனிதர், "ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்" என்றார் (லூக். 9:59ஆ; மத். 8:21ஐக் காணவும்). இந்த வேண்டுகோள் நியாயமானதாக ஒலிக்கிறது. ஒரு மனிதர் தமது தகப்பனை அடக்கம் பண்ணுதல் என்பது எப்போதுமே ஒரு மகனுடைய கடமையாக இருந்துள்ளது. அந்த நாட்களில், பெற்றோர் ஒருவரை அடக்கம் பண்ணுதல் என்பது கடமை களில் மிகவும் பரிசுத்தமானது உட்பட, வேறு எந்த செயலைக் காட்டிலும் முன்னுரிமை வாய்ந்ததாக இருந்தது.[15] மனிதர்கள் தங்கள் தந்தையர்களைக் கனப்படுத்த வேண்டும் என்று இயேசு தாமே போதித்திருந்தார் (மத். 15:4-6; யாத். 20:12; எபே. 6:1-3ஐக் காணவும்). ஒரு தகப்பன் தக்க வகையில் அடக்கம் பண்ணப்படுதலைக் காணுதல் என்பது நிச்சயமாகவே "கனப் படுத்துதல்" என்ற வார்த்தையில் உள்ளடக்கப்பட்டதாயிருக்கும்.*

*ஆகவே, கிறிஸ்துவின் பதில் ஒரு அதிர்ச்சி என்ற வகையில் வருகிறது: "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்; நீ போய் தேவனு டைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி" (லூக். 9:60; மத். 8:22ஐக் காணவும்). ''மரித்தோர்'' என்ற வார்த்தையை இயேசு இரண்டு கருத்துக்களில்*

பயன்படுத்தினார்: "சரீரப்பிரகாரமாக மரித்திருப்பவர்களை அடக்கம் பண்ணுவதற்கு ஆவிக்குரிய வகையில் மரித்திருக்கிறவர்களை[16] அனுமதி." மேலோட்டமாகப் பார்க்கும்போது கர்த்தருடைய வார்த்தைகள் கடுமையானவைகளாக, பரிதாபமற்றவைகளாக, உணர்ச்சியற்றவைகளாகத் தோன்றுகின்றன. அவைகளுக்குப் பின்னால் சாத்தியமான வகையில் இருக்கக் கூடியது என்ன? பின்வரும் காரணிகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

(1) வேதாகம நிகழ்ச்சிகள் நடந்த நாடுகளில் அடக்கம் பண்ணுதல் என்பது உடனடியாக (சாத்தியமானால் ஒருவர் மரித்த அதே நாளில்) நடைபெற்றது,[17] அதைத் தொடர்ந்து வந்த சடங்குகள் ஒரு வாரம் அல்லது அதற்கதிகமான காலத்தை எடுத்துக் கொண்டன. இதை நாம் எவ்வகையில் கண்ணோக்கினாலும், இந்த மனிதர் கர்த்தரின் அழைப்புக்கான தமது பதில்செயலைத் தாமதப்படுத்தினார்.

(2) கிறிஸ்து எருசலேமுக்குச் செல்லும் தமது வழியில் கடந்து கொண்டிருந்தார்.[18] இந்த மனிதர் உண்மையில் அவரை[கிறிஸ்துவை]ப் பின்பற்ற விரும்பினால் அவர் பிற்பாடல்ல, அப்போதே போக வேண்டிய தாயிருந்தது.[19]

(3) அந்த நாட்களின் பழக்க வழக்கங்களை ஆழ்ந்து சிந்திக்கும்போது, இந்த மனிதர் தமது தீர்மானத்தை முடிவற்ற வகையில் தள்ளிப்போட்டார் என்பதற்குச் சாத்தியம் இருந்தது. இவரது வேண்டுகோளானது, இவரது தந்தை சமீபத்தில் மரித்திருந்தார் மற்றும் இவர் அவரது அடக்க நிகழ்ச்சி களில் அவசரமாகக் கலந்து கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுத்தி யிருக்க அவசியமில்லை. இவரது வார்த்தைகள் "எனக்கு இப்போது குறிப்பிட்ட சில குடும்பப் பொறுப்புகள் உள்ளன. சற்றுக் காலம் கழித்து, எனது தந்தை இறந்தபின்பு, மற்றும் எனது பொறுப்புகள் நிறைவேற்றப் பட்ட பின்பு, நான் உம்மைப் பின்பற்றுவேன்" என்று அர்த்தப்படுத்தி யிருக்கக் கூடும்.[20] அந்தக் கலாச்சாரத்தில் வாழ்ந்தவர்களுக்கு, "முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண ... வேண்டும்" என்ற வார்த்தைகள் மிகவும் தொலைவில் இருந்த எதிர்காலத்தைச் சுட்டிக் காண்பித்தன, அதைப் பேசியவர் அந்த முன்மொழிதலை ஆழ்ந்து சிந்திப்பார் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகளைத் தருகின்றார்கள்.[21] இதுவே இவ்விடத்தில் விஷயமாக இருந்தது என்று விளக்கவுரையாளர்கள் நம்புகின்றனர். இந்த மனிதரின் தந்தை இறந்துபோய், அடக்கம் செய்யப்படாதிருந்தால், இந்த மனிதர் "என்னைப் பின்பற்றி வா" என்று இயேசு இவரிடத்தில் கூறக்கூடிய இடமான சாலையோரத்தில் நின்றுகொண்டு இருந்திருக்க மாட்டார் என்று அவர்கள் சுட்டிக் காண்பிக்கின்றார்கள். அதற்கு மாறாக, இந்த மனிதர் தமது பொறுப்புக்களைக் கவனிப்பதில் மும்முரமாய் இருந்திருப்பார்.[22]

(4) இயேசு மனிதர்களின் இருதயங்களை அறிந்தார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த மனிதரின் வார்த்தைகள் எவ்வளவு நியாயமுள்ளதாய் ஒலித்தாலும், அவற்றை இம்மனிதர் கிறிஸ்துவைப் பின்பற்றாதிருப்பதற்குச் சட்டப்பூர்வமான காரணமாக அவர் [கிறிஸ்து] கருதாமல், சாக்குப்போக்காகவே கருதினார்.

"முன்பு" என்ற வார்த்தையே இந்த மனிதரின் சாக்குப்போக்கில்

*பரிதாபமிக்க வார்த்தையாக உள்ளது: "ஆண்டவரே, முன்பு நான் போய் எனது தந்தையை அடக்கம்பண்ணுவதற்கு என்னை அனுமதியும்." தேவன், "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" என்று கூறியிருந்தார் (யாத். 20:3). இயேசு, "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்" என்று கூறியிருந்தார் (மத். 6:33அ). ஒரு மனிதர் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு மேலாக வேறு எதையும் - குடும்பத்தின் மீதான அன்புகூட - முன்னுரிமை பெறக்கூடாது என்று கிறிஸ்து தொடர்ந்து வலியுறுத்தினார் (லூக். 14:25-27). அவர் பற்றுறுதியில் ஒரு அடிப்படை மாற்றத்தை அழைத்தார்!*

*இந்த மனிதர், "முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும்'' என்று கூறியபோது இவரது இருதயத்தில் இருந்த எல்லாவற்றையும் நான் அறியவில்லை, ஆனால் சீஷர்களாகவிருக்கும் பலரிடத்தில் நான் இவரது ஆவியைக் கண்டிருக்கின் றேன். இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள், "முதலில் நான் போய் எனது விஷயங்களைக் கவனிக்க அனுமதியுங்கள், பின்பு நான் இயேசுவைப் பின்பற்றுவேன்'' என்று கூறியுள்ளதைக் கேட்டிருக்கின்றேன். இளம் தொழில் வல்லுநர்கள், "நான் முதலில் எனது பணியை நிலைநாட்டி ஒரு குடும்பத்தை நடத்தத் தொடங்குவேன், பின்பு நான் இயேசுவைப் பின்பற்றுவதில் தீவிரமாய் ஈடுபடுகிறவனாய் இருப்பேன்'' என்று கூறியுள்ளதை நான் கேட்டிருக்கின்றேன். வயதான ஆண்கள், "என்னுடைய காரியங்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட உடனேயே, நான் இயேசுவைப் பின்பற்றுவேன்" என்று சொல்வதைக் கேட்டிருக்கின்றேன். முன்மொழியப் பட்ட இலக்குகள், சிலவேளைகளில் தகுதிவாய்ந்தவைகளாக இருந்தன, அவைகள் சில வேளைகளில் தகுதியற்றவைகளாக இருந்தன; ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும், அவர்கள் கிறிஸ்துவுக்கு முன்னதாக, முதலில் அவற்றை வைத்தனர் என்பது பரிதாபகரமானதாயிருந்தது.[23]*

*நான் போதித்து ஞானஸ்நானப்படுத்திய ஒரு மனிதரை நான் நினைத்துப் பார்க்கின்றேன், அவர் ஒரு திறமை வாய்ந்த இளம் தந்தையாக, மாபெரும் சாத்தியக்கூறுள்ளவராக இருந்தார். முதலில் அவர் கர்த்தருடைய ஊழியத்தில் ஊக்கமிக்கவராக ஈடுபாடு கொண்டவராக இருந்தார். பின்பு அவர் தமது சொந்த வியாபாரத்தைத் தொடங்கி இரவும் பகலும் அதில் உழைக்கத் தொடங்கினார். அவர் தமது குடும்பத்தைக் கவனிக்காது விட்டார்; அவர் மிக அரிதாகவே ஆராதனை ஊழியங்களில் காணப் பட்டார். அவர், "நான் முதலில் எனது வியாபாரத்தைக் கட்டி எழுப்புவேன். பின்பு நான் தேவனுக்கு அர்ப்பணிப்பதற்கென்று நேரத்தையும் பணத்தை யும் பெற்றிருப்பேன்" என்று கூறுவதன் மூலம் தமக்குத்தாமே சாக்குப் போக்கு சொல்லிக் கொண்டார். அவர் கர்த்தரிடமிருந்து தூரமாக தூரமாக விலகிச் சென்றார்; நான் அறிந்த வரையில், அவர் ஒருக்காலும் திரும்பி வரவேயில்லை.*

*தீர்மானமற்ற நபருக்கு, "நேர்மாறானதை ஆழ்ந்து சிந்தியுங்கள்" என்பது இயேசுவின் செய்தியாக இருந்தது. உண்மையில் அவர், "நேர்மாறான கடமைகளுக்கிடையில் ஒரு தெரிவை மேற்கொள்ள வேண்டியிருக்கும்*

*போது, நீங்கள் என் சீஷராயிருந்தால், நான் உங்களுக்குக் கட்டளை யிட்டதை நீங்கள் முதலில் செய்ய வேண்டும்" என்றே கூறினார்.*

*இவரிடத்தில் இயேசு கட்டளையிட்டிருந்தது என்ன? "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி" (லூக். 9:60). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "அடக்கம் பண்ணுதல் போன்ற வாழ்வின் சாதாரணப் பணிப்பொறுப்புக்களில் கலந்துகொள்பவர்கள் எப்போதும் இருப்பார்கள், ஆனால், என்னிடம் உனக்காக ஒரு விசேஷித்த வேலை இருக்கிறது: நீ எல்லா இடத்திற்கும் சென்று, ராஜ்யம் நிலைநாட்டப்படப் போகிறது என்பதாகப் பிரசங்கி![24] தேவை அவசரமானதாக உள்ளது, எனவே இப்பொழுதே என்னைப் பின்பற்றி வா."*

***திட்டவட்டமில்லாத நபர் (லூக். 9:61, 62)***

*சீஷராகவிருந்த மூன்றாவது நபர், இரண்டாவது நபரைப் போலவே முதலில் வேறு எதையோ செய்வதற்குத் தம்மை அனுமதிக்கும்படி கேட்டுக் கொண்டார்: "ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டு வரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்" (வ. 61). முந்திய வேண்டுகோளைப் போலவே, இவரது விண்ணப்பமும் நியாயமற்றதாகக் காணப்படாதிருந்தது.[25] ஆயினும், கிழக்கத்திய நாடுகளில் பிரிவு உபசாரச் சடங்குகள் பல நாட்கள், வாரங்கள், மற்றும் மாதங்களைக் கூட எடுத்துக் கொள்பவைகளாக இருந்தன என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த மனிதர் இயேசுவைப் பின்பற்ற வேண்டியிருந்ததென்றால் இவர் அதை அப்போதே செய்ய வேண்டியிருந்தது; அவ்விடத்தில் ஆண்டவர் அடுத்த நாளில், ஒரு வாரத்திற்கும் குறைவான காலத்தில் அல்லது ஒரு மாதத்திற்குப் பின்பு இருக்க மாட்டார்.*

*இந்த மனிதர் பிரிவு சொல்லிக் கொள்வதற்காக வீட்டிற்குச் சென்றால், இவரது குடும்பத்தார், கிறிஸ்துவின் சீஷராயிருப்பதன் நிச்சயமற்ற தன்மை யுடைய வாழ்வுக்கு இவர் தம்மை ஒப்புவித்தல் குறித்துப் பேசி, அதற்கு எதிரிடையாக முடிவு எடுக்கும்படி செய்துவிடுவார்கள் என்ற சாத்தியக் கூற்றையும் ஆழ்ந்து சிந்தியுங்கள்.[26] இந்துமத முறைமையின்படி வளர்க்கப் பட்டுள்ளவர்களுக்குப் போதிக்கும் ஊழியக்காரர்கள், இந்துப் பெற்றோர் கள் தங்கள் பிள்ளைகள் கிறிஸ்தவத்தைத் தழுவிக்கொள்ளாதிருக்க இணங்கச் செய்வதற்கு எந்த அளவுக்கும் செல்வார்கள் என்று கூறுகின்றனர். கடைசி முயற்சியாக அவர்கள், "சரி, நீ ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வ தென்றால், அது நடக்கட்டும். ஆனால் உன்னிடத்திலிருந்து நாங்கள் ஒன்றை மட்டும் கேட்கின்றோம்: நீ அவ்வாறு பெற்றுக் கொள்வதற்கு முன், கடைசி முறையாக ஒரு தடவை வீட்டிற்கு வா. நாங்கள் உனக்குச் செய்துள்ள எல்லாவற்றையும் கருத்தில் கொண்டால், இது நிச்சயமாகவே அதிகமாய்க் கேட்பதாக இராது" என்று கூறுகின்றார்கள். அவ்வாறு செல்லும் பிள்ளைகளில் ஒரு சிலரே, இருதயத்தைக் கிழிக்கும் அவர்களின் வேண்டு கோளை எதிர்த்து நிற்க முடிகிறது, அப்படி வீட்டிற்குச் செல்கின்றவர்களில்*

*மிகச் சிலரே கிறிஸ்தவர்களாகும்படி திரும்புகின்றார்கள் என்று அந்த ஊழியக்காரர்கள் கூறுகின்றனர்.*[27]

*இந்தத் தனிநபருக்கு இயேசு, இரண்டாமவருக்குக் கூறியது போல் தள்ளிப்போடாதிருக்கும்படி வற்புறுத்தி பதில் அளித்திருக்க முடியும். ஆயினும் அவர் இந்த மனிதரின் இருதயத்தைக் கண்ணோக்கியபோது, இந்த மனிதர் தமது பழைய வாழ்விலிருந்து ஒருபோதும் விடுதலையாக முடியாத அளவுக்கு அவ்வாழ்வுடன் அதிகமாய்ப் பிணைபட்டிருந்ததைக் கண்டார். திட்டவட்டமில்லாத இந்த நபருக்கு, "விளைவுகளைத் தொடர்ந்து ஆழ்ந்து சிந்தித்துப் பார்" என்பதே இயேசுவின் செய்தியாய் இருந்தது. "அதற்கு இயேசு: 'கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல' என்றார்" (வ. 62).*

*இவ்விடத்தில் கூறப்பட்ட கலப்பை என்பது முற்காலத்திய, இலகுவான எடைகொண்ட, இடது கையினால்*[28] *பற்றிப் பிடிக்கக் கூடிய கலப்பையாக இருந்தது, இதைக் கையாளும் வேளையில் வலது கையானது காளையை விரட்டும். நீங்கள் எப்போதாவது உழுதிருந்தாலும் இல்லாவிட்டாலும், தமது தோளுக்கு மேலாக பின்னிட்டுப் பார்க்கிற எவரும் ஒரு நேரான பாத்தியாக உழ முடியாது என்பது உங்களுக்குத் தெளிவாகியிருக்கும். காயம்பட்ட நாள் ஒன்று என் நினைவுக்கு வருகிறது. நான் ஒரு சிறுவனாக இருந்தபோது, ஒரு நிலத்தை உழுவதற்குக் கூலியமர்த்தப்பட்டேன். நான் என்ன செய்தேன் என்பது பற்றிக் கருத்து எதுவும் கொண்டிருக்கவில்லை. அந்த நிலம் முழுவதும் மீண்டும் உழ வேண்டியதாக இருக்குமளவுக்கு பாத்திகள் மிகவும் கோணலானவைகளாயிருந்தன!*

*பின்னிட்டுப் பார்த்தல் என்பது உழவு செய்யும் மனிதருக்கு மாத்திரம் அழிவுக்குரியதாய் இருப்பதல்ல; இது கர்த்தரைப் பின்பற்றவிருப்பவர்களுக்கும் அழிவுக்குரியதாய் இருக்கிறது.*[29] *சீஷராக விருந்த இந்த மனிதர் குடும்பத்தையும் நண்பர்களையும் பின்னிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார் என்பது உறுதி, ஆனால் அந்த வசீகரமானது கடந்த காலத்திலிருந்து வந்ததாக - கிறிஸ்தவக் கொள்கைகளைப் புறக்கணித்ததினால் அடையப்பட்ட கடந்த கால வெற்றிகள் உட்பட - எதுவாக வேண்டுமானாலும் இருக்க முடியும். கிறிஸ்துவைப் பொறுத்தமட்டில், பாவத்தின் பழைய வாழ்வை உள் ஆர்வத்துடன் தொடர்ந்து பின்னிட்டுப் பார்க்கின்றவர்கள் ராஜ்யத்திற்குள் பிரவேசித்தலில் இருந்து தங்களைத் தகுதியிழக்கச் செய்கின்றார்கள்.*

## இந்நாட்களில் சீஷர்கள் ஆகின்றவர்களாய் இருப்பவர்கள்

*நமது வேதபாடப் பகுதிகளிலிருந்து நாம் அடைய வேண்டிய முடிவு என்ன? மதப்பிரிவுக்காரர்கள், லூக்கா 9:57-62 போன்ற வசனப்பகுதிகளை, மதப்பிரிவுக்குள் வரத்தொடங்கியுள்ளவர்கள் குடும்பம், நண்பர்கள் உட்படத் தங்கள் முந்திய வாழ்வில் உள்ள எல்லாப் பிணைப்புக்களிலும் இருந்து தங்களைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்*

கொள்ளுதல் என்ற தங்களின் கடுமையான கொள்கையை நியாயப் படுத்துவதற்குப் பயன்படுத்துகின்றனர். இருப்பினும், குடும்பப் பொறுப்புக் களை நிறைவேற்றுதல், நண்பர்களைக் கொண்டிருத்தல் அல்லது சவ அடக்கங்களுக்குச் செல்லுதலைக் கூடத் தவறானது என்று இயேசு ஒருக்காலும் போதித்ததில்லை. அதற்கு நேர்மாறாக, நாம் நமது பெற்றோர் களைக் கவனித்துக் கொள்ள வேண்டும் (மத். 15:4-6; 19:19) என்று அவர் போதித்தார், அவர் நண்பர்களைக் கொண்டிருந்தார் (லூக். 12:4; யோவா. 15:15), மற்றும் அவர் ஒன்று அல்லது இரண்டு சவ அடக்கங்களிலும் கூட கலந்துகொண்டிருந்தார் (மத். 9:23-25; லூக். 7:12-15).

இந்தப் பிரசங்கத்தில் நாம் பலமுறை பயன்படுத்தியுள்ள ஒரு வார்த்தையில் லூக்கா 9:57-62ன் செய்தியானது தொகுத்துரைக்கப்படக் கூடும்: ஒப்புக்கொடுத்தல். கிறிஸ்துவின் சீஷர்களாக இருப்பதற்கு நாம் அவருக்கும் அவரது ஊழியத்திற்கும் முற்றிலுமாக மற்றும் முழுவதுமாக ஒப்புக்கொடுத்தவர்களாய் இருக்க வேண்டும்.

**மனத்தூண்டுதல் உள்ள நபர்கள்**

மனத்தூண்டுதல் உள்ள நபர்களுக்குக் கர்த்தர்,[30] ‘‘நீங்கள் அந்த ஒப்புக்கொடுத்தலை ஏற்படுத்துமுன் அது [உங்கள்] மேல் சுமத்துவது என்ன என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்’’ என்று கூறுகின்றார்.

முன்னதாகக் கிறிஸ்து, “ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்” என்று கூறியிருந்தார் (லூக். 9:23). பலஸ்தீனத்தில் வாழ்ந்திருந்த பெரும்பான்மையானவர்கள், யாரேனும் ஒருவர் தமது சிலுவையைச் சுமந்து செல்வதைக் கண்டிருந்தார்கள். நீங்கள் ஒரு சிலுவையைச் சுமந்து சென்றால், நீங்கள் இறக்கப் போகின்றீர்கள் என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருந்தார்கள் (யோவா. 19:17ஐக் காணவும்); சிலுவையைச் சுமந்து செல்லுதல் என்பது [திரும்பி வர முடியாத] ஒரே வழிப்பயணமாக இருந்தது. ‘‘என்னைப் பின்பற்றி வா’’ என்ற அறைகூவலைக் கர்த்தர் விடுத்தபோது, அவர் சுயமறுப்பின் மிக உச்சகட்டத் திற்கென்று அழைத்தார்.

நம்மில் பிரசங்கித்து போதித்துக் கொண்டிருப்பவர்கள், இயேசுவைப் பின்பற்றுதல் சுலபமானது என்ற மனப்பதிவை விட்டுச் சென்றால், நமது மாணவர்களுக்குத் தகாத வகையில் ஊழியம் செய்கின்றோம். கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில், ‘‘உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு’’ என்று கூறினார் (யோவா. 16:33ஆ). “கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்’’ என்று பவுல் எழுதினார் (2 தீமோ. 3:12). பழைய பாடல் ஒன்று, “சிலுவையை நீங்கள் சுமக்காவிட்டால், கிரீடத்தை நீங்கள் சூடிக்கொள்ள இயலாது’’ என்று அறிவிக்கிறது. இயேசுவை உண்மையாகப் பின்பற்றுதல் என்பதற்கு விலைக் கிரயமாகச் சிலவற்றைச் செலுத்த வேண்டும் என்பது எளிமையான சத்தியமாக உள்ளது!

நீங்கள் இயேசுவின் சீஷராக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பு

*கின்றாரா? நிச்சயமாக! அதே வேளையில், நீங்கள் அவ்வாறு ஆவதற்கு முன்பு, அதற்குத் தேவையான ஒப்புக்கொடுத்தலை நீங்கள் முழுமையாகப் புரிந்துகொண்டிருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார்.*

***தீர்மானமற்ற நபர்கள்***

*தீர்மானமற்ற நபர்களுக்குக் கிறிஸ்து, ''நீங்கள் அந்த ஒப்புக் கொடுத்தலை ஏற்படுத்தும்போது, வேறு எதைக்காட்டிலும், குடும்பம் மற்றும் நண்பர்கள் ஆகியோரைக் காட்டிலும் கூட நான் முன்னதாக வரவேண்டும் என்று அது அர்த்தப்படுத்துகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்'' என்று கூறுகின்றார். "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனை யாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல" (மத். 10:37).*

*ஒரு இல்லம், குடும்பம் மற்றும் நண்பர்கள் ஆகியவர்கள் நமது அடிப்படைத் தேவைகளில் இருக்கின்றார்கள். நாம் இயேசுவுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பதற்கு முன்பு, நாம் ஒவ்வொருவரும், "ஆனால் கர்த்தரைப் பின்பற்றுவதற்காக நான் இவர்களையெல்லாம் விட்டுவிட்டால் என்னவாகும்? நான் அதைச் செய்வதற்கு மனவிருப்பத்துடன் இருப் பேனா?'' என்று கேட்டுக் கொள்ள வைப்பார். இவைபோன்ற இருதயத்தை ஆராயும் கேள்விகள் பெருக்கப்பட முடியும்: "கிறிஸ்துவைப் பின்பற்றுதல் என்பது என் வருமானம் குறையும் ... நான் ஏற்படுத்தியுள்ள ஒப்புக் கொடுத்தலை மக்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் ... ஒருவேளை நான் துன்புறுத்தப்படவும் கூடும் ... என்று அர்த்தமானால் என்ன செய்வது? அப்பொழுதும் நான் அவரைப் பின்பற்றுவேனா?'' மிகாயில் வில்காக் அவர்கள், "இருவழிகளில் ஒன்றைத் தேர்ந்து கொள்ளுதல் அவசியமாகும் போது, நாம் எதைப் பின்பற்றுகின்றோம்? வசதி அல்லது பொது நடைமுறை அல்லது பழக்கவழக்கம் - அல்லது கிறிஸ்து?" என்று எழுதினார்.*[31]

*கிறிஸ்து, "சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி ..." என்று பவுல் எழுதினார் (கொலோ. 1:18).* KJV*யில் இது* "that in all things He might have *the preeminence*" *என்றுள்ளது. கர்த்தர் முதலிடத்தில் வரவேண்டும் என்ற உண்மையானது சிலருக்கு ஒரு நினைப்பூட்டுதலாக உள்ளது; மற்றவர்களுக்கு இது ஒரு வெளிப்படுத்து தலாக உள்ளது.*

***திட்டவட்டமில்லாத நபர்கள்***

*இயேசுவின் செய்திகள் இவ்வளவு தூரம் முக்கியமானவைகளாக உள்ளன: ''என்னைப் பின்பற்றுதலின் விலை என்னவென்று ஆழ்ந்து சிந்தியுங்கள், அது உங்கள்மேல் சுமத்துவது என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.'' இருப்பினும், அந்த இரண்டு புத்திமதிகளைக் கேள்விப் பட்ட பின்பு, சீஷராகவிருக்கின்றவர், ''கிறிஸ்துவைப் பின்பற்றுதல் அவ்வளவு கடினமானது என்றால், உண்மையில் நான் இதில் ஆர்வமாய் இருப்பதில்லை" என்று கூறுவதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.*

ஆகையால் திட்டவட்டமில்லாத நபர்களுக்கு அவர் கூறிய வார்த்தைகள், சமப்படுத்துவதற்கு அவசியமாகின்றன: "என்னைப் பின்பற்றுவதிலிருந்து பின்னிட்டுத் திரும்புவதின் விளைவுகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: நீங்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குத் தகுதியுடையவர்களாய் இருக்க மாட்டீர்கள்!"

இதைப் படிக்கின்ற உங்களில் பெரும்பான்மையானவர்கள், இந்த நிகழ்ச்சிக்கு முன்பு இயேசு, தாம் கட்டவிருந்த சபையை (மத். 16:18, 19; கொலோ. 1:13ஐயும் காணவும்) மேசியாத்துவ ராஜ்யமாக அடையாளப் படுத்தியிருந்தார் என்பதை அறிந்திருப்பீர்கள். பரலோகம் என்பது தேவனுடைய ராஜ்யம் என்ற வகையில் அடிக்கடி எடுத்துரைக்கப்பட்டதையும் நீங்கள் அநேகமாக அறிந்திருப்பீர்கள் (1 கொரி. 15:50; 2 தீமோ. 4:18; 2 பேது. 1:11). ஆகவே, "தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுடையவன் அல்ல" என்பதை நாம் வாசிக்கும்போது நாம், "ஆம், ஒருவர் கர்த்தரைப் பின்பற்ற மனவிருப்பமற்று இருந்தால், அவர் சபையில் உண்மையான உறுப்பினராக இருக்க முடியாது, மற்றும் கடைசியில் அவர் பரலோகத்திற்குப் போகமாட்டார்" என்று நினைக்கின்றோம். அந்தக் கூற்றின் ஒவ்வொரு பகுதியும் உண்மையானதாகவே உள்ளது, ஆனால் அது முதல் நூற்றாண்டில் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டவர்களுக்கு உணர்வுப் பூர்வமான செயல்தாக்கத்தை எடுத்துரைப்பதில்லை.

இயேசுவின் உரையைக் கேட்டவர்களுக்கு, மேசியாவின் ராஜ்யம் எதை அர்த்தப்படுத்தியது என்பதை சிந்தைக்குக் கொண்டு வாருங்கள். அவர்கள் ராஜ்யத்திற்காகப் பல நூற்றாண்டுகளாக கண்ணோக்கி, ஜெபித்து, ஏங்கிக் கொண்டிருந்தார்கள் (மாற். 11:10; 15:43ஐக் காணவும்). கர்த்தர், "பரலோக ராஜ்யம் சமீபித்து இருக்கிறது" என்று பிரசங்கித்து வந்தார் (மத். 3:2; 4:17). அவர் தம்மைப் பின்பற்றியவர்களிடத்தில், ''... இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை ..." என்று கூறியிருந்தார் (மாற். 9:1). அந்த ராஜ்யமானது நிலைநாட்டப்பட வேண்டிய வேளை நெருங்கி வந்து கொண்டிருந்தபோது உணர்வெழுச்சி கட்டி எழும்பிக் கொண்டிருந்தது.[32] அந்த ராஜ்யம் வரும்போது, அதற்குத் தகுதியற்றவராக இருப்பது என்பது சாத்தியமான எல்லாப் பேரழிவுகளிலும் மகாபெரியதாக இருந்தது! இருப்பினும் அதுவே, கலப்பையில் கை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவரொருவரின் முடிவாக இருக்கும் என்று கிறிஸ்து அறிவித்தார்.

புதிய ஏற்பாடானது ராஜ்யத்தை/சபையை, எந்த தியாகத்திற்கும் தகுதியான விலைமதிப்பற்ற பொக்கிஷங்களுக்கு ஒப்பிடுகிறது (மத். 13:44-46). ராஜ்யம்/சபை பற்றிய செய்தி, "நற்செய்தி"யாக உள்ளது (மத். 24:14; அப். 8:12). ராஜ்யத்தில்/சபையில் நாம் கிறிஸ்துவுடன் ஐக்கியம் கொண்டுள்ளோம் (மத். 26:29). ராஜ்யத்தில்/சபையில் நாம் நீதி, சமாதானம் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றைக் கொண்டுள்ளோம் (ரோமர் 14:17). இயேசுவின் ராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்களாயிருத்தல் என்பது பேரழிவுகளில் எல்லாம் பேரழிவாக இருக்கும் என்று நாமும் கூட விசுவாசிப்பதாக நான் நம்புகின்றேன்.

*கர்த்தரைப் பின்பற்றுவதற்கு நமது இருதயங்கள் அவரில் நிலைத்திருக்க வேண்டும். ‘‘விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமை யோடே ஓடக்கடவோம்'' (எபி. 12:1இ). பவுல், ‘‘... ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக் குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்'' என்று எழுதினார் (பிலி. 3:13ஆ, 14).[33] பிரிவுபட்ட இருதயத்தைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ள மாட்டார் (ஓசியா 10:2; வெளி. 3:16).*

## முடிவுரை

*சீஷர்களாக இருந்த மூன்றுபேர் இயேசுவின் அறைகூவலுக்கு எவ்வாறு பதில் அளித்தார்கள்? அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்களா? அல்லது அவர்கள் செல்வந்தனும் இளைஞனுமா யிருந்த அதிகாரியை(மத். 19:22)ப் போலத் துக்கமிகுந்தவர்களாய் அப்புறம் சென்று விட்டார்களா? நமக்குக் கூறப்படவில்லை. உங்களுக்குப் பின்வருமாறு கூறப்பட்டால் நீங்கள் எவ்விதமாய்ப் பதில்செயல் செய்வீர்கள்? ...*

*... நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றினால் கடினமான சூழ்நிலைகளே உங்களுக்குக் காத்திருக்கின்றன.*

*... உங்கள் தந்தையை வேறு யாராவது அடக்கம் செய்ய வேண்டும்.*

*... உங்கள் குடும்பத்தாரிடத்தில் நீங்கள் பிரிவு சொல்லிக் கொள்ளக் கூட முடியாது.*

*... நீங்கள் பின்னிட்டுத் திரும்பினால், கர்த்தருடைய ராஜ்யத்திற்குத் தகுதியானவர்கள் அல்ல.*

*மிக முக்கியமாக, இன்றைக்கு அவரது அழைப்புக்கு நீங்கள் எவ்வாறு பதில்செயல் செய்வீர்கள்? அவர் இன்னமும், ‘‘என்னைப் பின்பற்றி வா'' என்று கூறுகின்றார், ஆனால் அதற்குத் தேவையானவைகள் குறைக்கப்படா திருக்கின்றன: ‘‘ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்'' (லூக். 9:23). உங்கள் வாழ்வை, உங்களுக் குள்ள எல்லாவற்றையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க நீங்கள் மனவிருப்ப மாய் இருந்தால், தயவு செய்து இன்றே அதைச் செய்யுங்கள்.[34]*

## குறிப்புகள்

*‘‘சிற்றெழுத்துக் குறிப்புக்கள் இல்லை'' என்பது இந்தப் பிரசங்கத்திற்கு மாற்றுத் தலைப்பாக இருக்கலாம். ‘‘சீஷத்துவத்தின் விலை'' மற்றும் ‘‘சீஷத்துவத்திற்கு வேண்டியவைகள்'' ஆகியவை சாத்தியமான மற்ற தலைப்புகளில் உள்ளடங்குகின்றன.*

*குறிப்புகள்*

*[1]உங்களுக்கு இப்படிப்பட்ட அனுபவம் ஏற்பட்டிருந்தது என்றால், நீங்கள் இதை தனிப்பட்ட வகையாக்க விரும்பலாம். எந்த வகையிலும், தொடக்க விவரிப்பை நீங்கள் வாழும் பகுதிக்குப் பொருத்தமானதாக்குங்கள். [2]சுவிசேஷ எழுத்தாளர்களுக்கு நாள்வரிசை முறைமை என்பது முக்கியமற்றதாக இருந்ததால், இரண்டு நிகழ்ச்சிகளும் ஒன்றாகவே இருந்திருக்க முடியும். இருப்பினும், இரு விவரங்களுக்கும் காட்சியமைவு ஒன்றாக இருந்ததில்லை, எனவே இவைகள் வெவ்வேறு காலகட்டங்களில் நடைபெற்றிருக்கலாம். சீஷர்கள் ஆகின்றவர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட வேளைகளில் இயேசுவிடத்தில் ஒரே மாதிரியான கூற்றுக்களை ஏற்படுத்திய ஒவ்வொரு வேளையிலும், அவர் ஒரே வகையில் பதில் அளித்தார் என்று கற்பனை செய்வது கடினமானதாக இருப்பதில்லை. [3]இந்த வசனப்பகுதியை, யோவான் 13:37 மற்றும் லூக்கா 22:33 ஆகிய வசனங்களில் உள்ள, பேதுருவின் மனத் தூண்டுதலான, தகுதியற்ற கூற்றுக்களுடன் ஒப்பிடவும். [4]இயேசு பயணம் செய்து போதித்த பகுதிகளில் நரிகளும் பறவைகளும் ஏராளமாயிருந்தன (நியா. 15:4; நெகே. 4:3; சங். 63:10; உன். 2:15; புல. 5:18; எசே. 13:4; மத். 6:26; 13:4, 32; லூக். 13:32). [5]''கூடுகள்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "பாளையங்கள்" என்று நேரடியாக அர்த்தம் கொண்டுள்ளது. இது கூடுகளை மட்டுமின்றி அமர்ந்து ஓய்வெடுக்கும் இடங்களையும் உள்ளடக்குகிறது. [6]இந்த சந்தர்ப்பப் பொருளில் "மனுஷ குமாரன்"என்பது இயேசுவையே குறிக்கிறது. [7]"தலை சாய்க்கவும் இடமில்லை" என்பது "இல்லம் இல்லை" என்று கூறுவதற்கான பழமொழி நடையாக இருந்தது.* The Cotton Patch Version *என்ற வேதாகமத்தில் இதேபோல் அர்த்தப்படுகிற* "no place to hang His hat" *என்ற அமெரிக்கச் சொல்விளக்கம் பயன்படுத்தப்பட்டுள்ளது. [8]இயேசு தாம் இரவில் உறங்கக் கூடுமாறு அவ்வப்போது வீடுகளை - கப்பர் நகூமில் பேதுருவின் வீடு, பெத்தானியில் மரியாள் மற்றும் மார்த்தாள் ஆகியோரின் வீடு போன்றவற்றை - கொண்டிருந்தார், ஆனால் அவர் நிலையான தங்குமிடத்தை கொண்டிருந்தது இல்லை. அவரும் அவரது சீஷர்களும் பெரும்பாலான வேளைகளில் அலைந்து திரிந்து கொண்டிருந்தனர்.* [9]Quoted in William Barclay, *The Gospel of Matthew*, rev. ed., vol. 1 (Philadelphia: Westminster Press, 1975), 311. *[10]அமெரிக்காவில் ''சொத்து-சுகம்''* (health-and-wealth) *என்று தொலைக்காட்சி நிகழ்ச்சியின் சுவிசேஷ ஊழியர்கள் தங்களின் கட்டிடங்கள், நிலங்கள் மற்றும் படகுகள் ஆகியவற்றை, தேவன் தங்களின் ஊழியத்தை அங்கீகரித்திருப்பதன் ஆதாரமாகக் காட்டுதல் என்பது, இங்கு கூறப்பட்ட விஷயத்திலிருந்து எவ்வளவு நேர்மாறானதாக உள்ளது! இவ்விடத்தில் பிரசங்கியார்களாகவும் ஊழியக்காரர்களாவும் வரவிருப்பவர்களுக்குச் செய்தியொன்று உள்ளது: ஊழியத்தை உங்களுக்கு பணம் மற்றும் உடமைகளை அளிக்கும் பணிவாய்ப்பாகக் கண்ணோக்காதீர்கள். மாறாக, ஒரு ஊழியத்திற்கு உங்களையே ஒப்புக்கொடுத்து, வாழ்வின் (வசதிகளை அல்ல ஆனால்) தேவைகளைக் கர்த்தர் அளிப்பார் என்று அவர்மீது நம்பிக்கையாயிருங்கள் (மத். 6:33).*

*[11]அவர் சுயவிருப்புடன் பரலோகத்தை விட்டுவந்தார், அவர் நாசரேத்தூரில் இருந்த தமது வீட்டை விட்டுச் சுயவிருப்புடன் புறப்பட்டு வந்தார். [12]சீஷர்களாகவிருந்தவர்களிடம் இயேசு, "விலையைக் கணக்கிடுங்கள்" என்று கூறிய இன்னொரு வேளைக்கு, லூக்கா 14:27-30ஐக் காணவும். [13]பல்வேறு ஒப்புவமைகள் பயன்படுத்தப்பட முடியும்: "இயேசு முதலாவமவருக்கு 'வ்வாஹ்'* [மாடுகளை நிறுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் சொற்குறிப்பு] *என்று சொன்னார், ஆனால் இரண்டாமவருக்கு 'சுற்றியெழுப்பு' என்றார்"; "இயேசு முதலாமவருக்கு தடை போட்டார், மற்றும் இரண்டாமவரை இயக்குவித்தார்." நீங்கள் வாழும் இடத்தில்*

*உள்ளவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய ஒப்புவமையைப் பயன்படுத்துங்கள். முதலாமவர் அளவுக்கு அதிகமான ஆர்வம் கொண்டிருந்தார், இரண்டாமவர் மிகவும் குறைவான ஆர்வம் கொண்டிருந்தார். [14]இதற்குச் சற்று பின்பு, இயேசு எழுபது பேர்களை யூதேயாவிற்கு [ஊழியப்] பயணம் மேற்கொள்ள அனுப்பி வைத்தார் (லூக். 10:1). கிறிஸ்து இந்தப் பணிக்காக ஆட்களை, ஒருவேளை தேர்ந்துநியமித்துக் கொண்டிருந்து இருக்கலாம் (லூக். 10:2ஐக் காணவும்; லூக். 9:60ஐ லூக். 10:11ஆ-உடன் ஒப்பிடவும்). மனிதர்களிடத்தில் கிறிஸ்து, "என்னைப் பின்பற்றி வா'' என்று கூறியபோது, அவர்களை அவர் பெரும்பாலும் முழு நேர ஊழியத்திற்கென்றே அழைத்தார். [15]ரபீக்களின் கூற்றுப்படி, பெற்றோர் ஒருவரை அடக்கம் பண்ணுதல் என்பது மத ஊழியம் அல்லது நியாயப்பிரமாணத்தைப் படித்தல் ஆகியவற்றை விட முன்னுரிமை தரப்பட வேண்டிய விஷயமாக இருந்தது. ஒரு மகன் தனது தந்தையை அடக்கம் செய்வதில் மதரீதியான, சமூகரீதியான மற்றும் குடும்பரீதியான கட்டுப்பாடு கொண்டிருந்தார். அன்பான ஒருவரை அடக்கம் பண்ணுதல் பற்றிய பழைய ஏற்பாட்டு வசன மாதிரிக்கு, ஆதி. 23:9; 25:9; 35:29; 49:28-50:3; 50:5, 13, 14, 26; யோசு. 24:29, 30 ஆகிய வசனங்களைக் காணவும். [16]எபே. 2:1; 1 தீமோ. 5:6; 1 யோவா. 3:14 ஆகிய வசனங்களைக் காணவும். [17]மத். 9:18, 23; யோவா. 11:1, 14, 17; அப். 5:5, 6, 10 ஆகிய வசனங்களைக் காணவும். [18]மத்தேயு சுவிசேஷ விவரமும், இயேசு கலிலேயாக் கடலின் கிழக்குப் பகுதியை நோக்கி பயணத்தில் இருந்ததைக் காண்பிக்கிறது (மத். 8:18, 23, 28). [19]"இந்த மனிதர் வாய்ப்பின் குறுகிய ஜன்னல் ஒன்றைக் கொண்டிருந்தார்" என்பது நான் வாழும் பகுதியில் உள்ள சொல்லமைப்பு ஆகும். [20]இந்த இளைஞனின் வார்த்தைகள் பின்வரும் அர்த்தத்தையும் மறைமுகமாய் உணர்த்தியதாகச் சிலர் நினைக்கின்றார்கள்: ''நிலத்தை விற்று எனது பரம்பரைச் சொத்து எனக்குக் கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்பு, நான் உம்மைப் பின்பற்றுவேன். சீஷராயிருத்தல் என்பது சரிவரவில்லையென்றால், எனக்கு நிதிநிலைப் பாதுகாப்புத் தேவைப்படுமே."*

*[21]ஒரு ஊழியக்காரர், துருக்கியில் இருந்து வந்த ஒரு இளைஞனுக்கு அறிவுரை கொடுத்தது பற்றிக் கூறினார்: அந்த இளைஞன், "நான் முதலில் எனது தந்தையை அடக்கம் பண்ண வேண்டும்" என்று பதில் அளித்தார். அந்த ஊழியக்காரர் தமது பரிவிரக்கத்தைத் தெரிவித்தபோது, அந்த இளைஞன் தனது தந்தை இறந்திருக்கவில்லை என்று கூறினான். மாறாக அவன், ஊழியக்காரர் அறிவுரையின் படி செய்யுமுன் தனது குடும்பக் கடமைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற வேண்டும் என்று அர்த்தப்படுத்தினான். ஒரு ஆங்கிலேய அலுவலர், ஒரு அரபு இளைஞனுக்குக் கல்வி உதவித்தொகை அளிப்பதாகக் கூறினார். அதற்கு அந்த இளைஞன், ''நான் எனது தந்தையை அடக்கம் செய்த பின்பு அந்த உதவித் தொகையை எடுத்துக் கொள்வேன்'' என்று கூறினான். அந்த வேளையில் அவ்விளைஞனின் தந்தை சுமார் நாற்பது வயதுடையவராக மற்றும் நல்ல உடல் நலம் கொண்டவராக இருந்தார். மத்திய கிழக்கு நாடுகளில் இன்றைக்கும் கூட, யாரேனும் ஒருவர் பிறநாடு ஒன்றுக்கு குடியேற விரும்பினால், அவரிடத்தில், "நீங்கள் முதலில் உங்கள் தந்தையை அடக்கம் செய்யப்போவதில்லையா?'' என்று கேட்கப்படுகிறது என்பதாக ஒரு பேச்சாளர் கூறினார். இது, "உங்கள் குடும்பக் கடமைகளை நிறைவேற்றும் வரையில் நீங்கள் இங்கு தங்கப் போவதில்லையா?" என்று அர்த்தப்படுகிறது. [22]சாத்தியமாகும்போது, சவ அடக்கம், ஒருவர் மரணம் அடைந்த அதே நாளில் நடைபெறும் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். [23]இந்தப் பகுதியானது பெரிய அளவில் விரிவாக்கப்படக் கூடும். நான் ஆஸ்திரேலியாவில் சில ஊழியக்காரர்களுடன் ஊழியம் செய்து கொண்டிருந்த*

போது, அடிக்கடி எங்களிடத்தில், ''நாங்கள் உங்களுக்கு உதவுவதற்காக ஆஸ்திரேலியாவுக்கு வருவோம், ஆனால் முதலில் நாங்கள் ... ஐச் செய்ய வேண்டும்'' என்று கூறப்படுவதுண்டு. நாங்கள் அதைக் கேள்விப்படும்போது, அதைப் பேசுபவர் கள் ஒருக்காலும் வரமாட்டார்கள் என்று அறிந்தோம். நாங்கள் ஆஸ்திரேலியாவில் பிரசங்கியார் பயிற்சிப் பள்ளியொன்றைக் கொண்டிருந்தோம், அங்கு சேருவதற்கு வந்த மாணவர்கள் அடிக்கடி, "நாங்கள் இந்தப் பள்ளிக்கு வருவோம், ஆனால் முதலில் நாங்கள் ... ஐச் செய்ய வேண்டும்" என்று எங்களிடம் கூறினார்கள். நாங்கள் அதைக் கேட்டபோது, அந்த இளைஞர்கள் ஒருக்காலும் வரமாட்டார்கள் என்பதை அறிந்தோம். நீங்கள் கேள்விப்படுகின்ற சாக்குப்போக்குகளைக் கொண்டு நீங்கள் வாழும் இடத்திற்கு ஏற்ற வகையில் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துங்கள். [24]இந்த பாடத்தின் குறிப்பு எண் 14ஐக் காணவும். [25]எலியா எலிசாவை அழைத்தபோது, எலிசா இதே விதமான வேண்டுகோளை வெளியிட்டார், மற்றும் அந்தத் தீர்க்கரிசி அவ்வேண்டுகோளுக்குச் சம்மதித்தார் (1 இரா. 19:19-21). [26]இந்த பாடத்தின் குறிப்பு எண் 23ஐக் காணவும். ஊழியக்காரர்கள் ஆகவிருப்பவர்களின் பெற்றோர்கள் பின்வருமாறு பேசியதுதான் அவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வராமல் இருப்பதற்கான மிகப் பொதுவான காரணமாயிருந்தது: "தயவு செய்து எனது பேரக்குழந்தைகளை ஆஸ்திரேலியாவுக்குக் கூட்டிச் செல்லாதே, அங்கு நான் அவர்களை ஒருக்காலும் காண முடியாது!" [27]See Stephen F. Olford, *Committed to Christ and His Church* (Grand Rapids, Mich.: Baker Book House, 1991), 37-38. [28]லூக்கா 9:62ல், ''கை'' என்ற ஒருமைச் சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். [29]பின்னிட்டுப் பார்த்ததென்பது லோத்தின் மனைவிக்குப் பேரழிவாக இருந்தது (ஆதி. 19:26). [30]இந்தப் பயன்பாட்டுப் பகுதியில், ஒவ்வொரு வகைப்பட்ட நபருக்கும் இயேசுவின் செய்தியை நான் தொகுத்துரைப்பேன். இவைகள் மிகச் சரியாக மேற்கோள்களாயிருப்பதில்லை. ஒவ்வொரு விஷயத்திலும் நீங்கள் "உண்மையில்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதைத் தேர்ந்து கொள்ளலாம்.

[31]Michael Wilcock, *The Message of Luke: The Saviour of the World*, The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1979), 119. [32]சபை/ராஜ்யம் என்பது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று நிலைநாட்டப்பட்டது (அப். 2). [33]''பின்னிட்டுப் பார்க்கிறதைத்'' தடைசெய்தல் என்பது, கடந்த காலத்தை நம்முடைய ஞாபகத்திலிருந்து முற்றிலுமாக அழித்து எடுத்துப்போட வேண்டும் (அல்லது முடியும்) என்று அர்த்தப்படுவதில்லை. பவுல் தம் கடந்த காலத்தை (பிலி. 3:5, 6) ஞாபகத்தில் கொண்டிருந்தார், ஆனால் அதை நினைத்தே தம் காலத்தைக் கடத்தவில்லை. அவருடைய முழுநோக்கமும் கிறிஸ்துவையும் எதிர்காலத்தைப் பற்றியதாகவுமே இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில், மூலபாஷையில், லூக்கா 9:62ல் கூறப்பட்டுள்ள "பின்னிட்டுப் பார்க்கிற"தென்பது தற்செயலாகப் பார்க்கிறதைச் சுட்டிக்காட்டாமல், ஆனால் அதற்கு மாறாக தொடர்ந்து செய்யப்படுகிற செயலையே குறிக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். [34]உங்கள் செய்தியைக் கேட்பவர்களுக்கு இயேசுவின் சீஷராவது எப்படி (யோவா. 3:16; லூக். 13:3; மத். 10:32, 33; மாற். 16:15, 16) மற்றும் அவர்கள் தங்களுடைய ஒப்புக்கொடுத்தலுக்கு உண்மையுள்ளவர்களாய் இல்லாது போயிருந்தால், எப்படி மீளக்கட்டியெழுப்ப முடியும் (அப். 8:22; 1 யோவா. 1:9) என்பதைக் கூற நீங்கள் விரும்பலாம்.